1984 மார்ச் 24]

தானிப்பாடி-வாணாபுரம், தச்சம்பட்டி ஆகிய ஊர்களில் அரிசன மாணவ-மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்தும் திட்டம்.

439—(*வினா எண் 18030) திரு. த. வேணுகோபால் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா —

தண்டராம்பட்டுத் தொகுதியில் தானிப்பாடி, வாணாபுரம்' தச்சம்பட்டி ஆகிய ஊர்களில் அரிசன மாணவ, மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தண்டராம்பட்டு தொகுதியில் தானிப்பாடி, வாணாபுரம், தச்சம்பட்டி ஆகிய ஊர்களில் ஆதிதிராவிடர் மாணவ-மாணவியர்கள் தங்கும் விடுதி ஏற்படுத்த அரசிடம் செயற் குறிப்பு எதுவும் இல்லை. எனினும் வடாற்காடு மாவட்டம் ஆதிதிராவிடர் நல அலுவலரிடமிருந்து முன்மொழிவுகள் கோரப்பட்டுள்ளது. அவை கிடைத்த பின் உரிய மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

செங்கல்பட்டில் வேலை வாய்ப்புத்துறையின் உதவி இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தும் திட்டம்.

440—(*வினா எண் 18581) திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கற்பட்டு, மதுராந்தகம், சைதாப்பேட்டை ஆகிய வட்டங்களில் உள்ள பொதுமக்கள் நலனை உத்தேசித்து மையப்பகுதியான செங்கற்பட்டு நகரில் வேலைவாய்ப்புத் துறையின் உதவி வேலைவாய்ப்பு இயக்குநர் அலுவலகம் ஏற்படுத்தும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், எப்போது நிறைவேற்றப்படும் ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) செங்கற்பட்டில் உதவி இயக்குநர் தலைமையிலான வேலைவாய்ப்பு அலுவலகம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு எதுவும் அரசிடம் இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. பு. கோ. ஆனூர் ஜெகதீசன் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் சைதாப்பேட்டையில் இருந்தது. பிறகு அது அடையாறுக்கு மாற்றப்பட்டுவிட்டது. அதற்குப் பிறகு மாவட்டத்தின் எல்லைக்குள் இருக்கவேண்டும் என்ற நல்ல எண்ணத்தின் அடிப்படையில் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட்டிருக்கின்றது. உதவி அதிகாரி அலுவலகம் திருவள்ளூரில் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. செங்கற்பட்டு மாவட்டம் என்ற பெயரைக் கொடுத்திருக்கின்ற செங்கற்பட்டு

நகர் 207 ஆண்டு காலமாக நகராட்சியாக இருக்கின்றது. அங்கே எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை. எனவே இந்த எல்லாம் மனதில் கொண்டு செங்கற்பட்டு வட்டம், சைதாப்பேட்டை, வட்டம், மதுராந்தகம் வட்டம் ஆகிய மக்களின் வேண்டுகோளுக் கிணங்கவும், இளைஞர் நலனை முன்னிட்டும் மீண்டும் அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து செங்கற்பட்டிலே உதவி அலு வலகத்தைத் திறக்க உத்தரவிடுவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு என்ற பெயர் இருக்கக்கூடிய காரணத்தால் மட்டும் செங்கற்பட்டிலே வேலைவாய்ப்புத் துணை அலுவலகத்தை ஏற் படுத்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் சொல்வதை ஏற்றுக்கொள்வதற்கில்லை. அந்தந்த மாவட்டங்களின் தலை நகரிலே அனைத்து அலுவலகங்களும் ஏற்படுத்தப்படவேண்டும் என்ற கொள்கைக்கு ஏற்ப தற்போது சைதாப்பேட்டையிலே இருந்த மாவட்ட அலுவலகம் காஞ்சிபுரத்திற்கு மாற்றப்பட் டிருக்கின்றது. காஞ்சிபுரத்திலே இருக்கக்கூடிய அந்த அலுவலகம் செங்கற்பட்டு, சைதாப்பேட்டை, மதுராந்தகம், காஞ்சிபுரம், உத்திரமேரூர் ஆகிய தாலுக்காக்களின் மக்களின் பிரச்சினைகளைப் பூர்த்திசெய்கின்ற வகையில்தான் நடந்து வருகின்றது. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தனியாக ஒரு துணை வேலை வாய்ப்பு அலுவலகத்தைச் செங்கற்பட்டிலே ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டு அதற்கான நடவடிக்கை எடுக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். எதிர்காலத்தில் வேண்டுமானால் அரசு இதைத் தனியாகப் பரிசீலனை செய்து எந்த அளவுக்கு சாத்தியக் கூறு இருக்கிறதோ அதைப்பற்றி அரசு ஆராய்ந்து பார்க்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அணைகள் கட்டும் திட்டம்.

441—(*வினா எண் 17112) திரு. பெ. சு. திருவேங்கடம் : மாண்புமிகு நீர்ப்பாசனத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மாவட்டத்தில் புதிய அணைகள் கட்ட அரசு திட்டம் தீட்டியுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் அதன் விவரம் என்ன ?

(இ) அதன் மதிப்பீட்டுத் தொகை எவ்வளவு ?

(ஈ) எப்பொழுது வேலை துவங்கும் ?

மாண்புமிகு திரு. யா. சை. மு. யூசுப் : (அ) ஆம்.